## நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கற்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

-------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

---------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 989,505 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 165,974 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 823,530 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நிதியத்தின் மூலதன மானியங்கள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக அமைந்திருந்தது.

## 1. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கற்புலனற்ற பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களை செலுத்தும் போது அனைத்து வருடங்களிலும் தாமதங்கள் நிலவியதுடன், அதனை தடுப்பதற்கு பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மீளாய்வாண்டின் போது 88 கற்புலனற்ற மாணவர்களுக்கு தாமதித்து புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. | நலனாளிக்கு செலுத்தப்படும் பணம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவ செலுத்தப்படுவதுடன், ஆண்டின் இறுதி காலாண்டின் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். எவ்வாறெனினும், எதிர்வரும் ஆண்டுகளில் இறுதிக் காலண்டின் உறுதிச்சீட்டுகள் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டினுள்ளேயே செலுத்துவதற்கு நடைமுறையொன்றை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கற்புலனற்ற பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை உரிய சந்தர்ப்பத்திலேயே பெற்றுக்கொடுப்பதன் மூலம் மாணவர்களின் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு முடியுமானவாறு அதனை தாமதிக்க கூடாது. |
| (ஆ) | கண்பார்வை குறைபாடுடைய 15 நபர்களுக்கு கண் வில்லைகளை பெற்றுக்கொடுப்பதற்கான ரூபா 200,000 தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 36,600 தொகை செலவிடப்பட்டு 03 நபர்களுக்கு மாத்திரம் கண் வில்லைகள் வழங்கப்பட்டிருந்தது. கண்வில்லைகளை வழங்கும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராமையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் உச்சமானவாறு பயன்படுத்த முடியாதிருந்தது. | பார்வைக் குறைபாடுடைய நபர்களுக்கு கண் வில்லைகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் கற்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உதவிகள் வழங்கப்படுவது 60 வயதிற்கு குறைவான நபர்களுக்கு மாத்திரம் ஆகும். அவ்வாறே இலவசமான கண் வில்லைகளை வழங்கும் | கற்புலனற்றவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொண்டு தேவைப்பாட்டிற்கமைய கண் வில்லைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்திட்டம் சுகாதார அமைச்சு ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக கற்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான கேள்வி பாரியளவில் குறைவடைந்திருந்தது. எவ்வாறெனினும், கண் வில்லைகளுக்காக நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளின் அளவிற்கமைய தொடர்ந்தும் இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை கட்டுப்படுத்தி வறையறுக்கப்பட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (இ) | புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 02 நிறுவனங்களின் 50 கற்புலனற்ற மாணவரிகளுக்கு பயிற்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,000,000 ஒதுக்கப்பட்டிருந்தம போதிலும், ரூபா 863,400 தொகை செலவிடப்பட்டு 16 மாணவர்களுக்கு மாத்திரம் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது. | இலங்கை கற்புலனற்ற மக்களுக்கான சேவைகள் மன்றத்தினால் நடாத்திச் செல்லப்படும் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பில் இந்த வருடத்தில் பின்தொடர்தலொன்றை மேற்கொண்டு முகாமைத்துவ குழுவிற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. ஏனைய ஒழுங்கமைப்புகளின் செயன்முன்னேற்றமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கற்புலனற்ற மாணவர்களின் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான பின்தொடர்தலொன்றை மேற்கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சீதுவ தொழிற்பயிற்சி நிறுவனத்தின் கற்புலனற்ற பெண்களுக்கான நிலையத்தினால் நடாத்திச் செல்லப்படும் கைத்தறி பாடநெறி கடந்த 04 வருடங்களாக நட்டமான நிலையில் காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டின் போது அதன் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. பாடநெறிகளுக்காக பயிற்சியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு உரிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், சில வருடங்களாக 03 கற்புலனற்ற மாணவர்களுக்கு மாத்திரம் பயிற்சியாளர்களாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மற்றும் கைத்தறி புடவைகளன் விற்பனையும் அதிகரித்திருக்கவில்லை. தற்போது நிலவும் நிலை தொடர்பில் அறிக்கையொன்றினை கட்டுப்பாட்டு சபைக்கு முன்வைக்குமாறு தொழில்பயிற்சி நிறுவனத்தின் நிலையப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வாறானதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கற்புலனற்ற பெண்களின் உற்பத்தி வேகமும் மிகவும் குறைவானது என்பதுடன், அவர்கள் நீண்ட காலம் தங்கியிருப்பதில்லை. அது உற்பத்தி அளவு குறைவடைவதற்கும் இலாபம் பெறுவதற்கும் தாக்கமளிக்கும். சீதுவ கற்புலனற்ற பெண்களுக்கான நலன்புரி நிலையத்திறகாக மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டில் மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் தேவைப்பாடொன்று ஏற்படவில்லை. கொள்வனவு செய்த மூலப்பொருட்கள் காணப்பட்டமை அதற்கு காரணமாக இருந்தது. புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் புதிய இயந்திரங்கள் சில மற்றும் பயிற்சி மதியுரையாளர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு இணங்கியுள்ளதுடன், அதற்கான செயற்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகளை எதிர்வரும் முகாமைத்துவ கூட்டங்களில் முன்வைத்து அங்கீகாரத்தினை பெற்று உரிய உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | இந்த புடவைக் கைத்தொழில் நிலையத்திற்கு மதியுரையாளர் ஒருவரை நியமித்து பாடநெறியை ஆரம்பிப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கற்புலனற்றவர்களுக்கு கலைத்துவ பயிற்சிகளை தொடர்வதற்கு அல்லது தொழிற்பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு இணலுமான வகையில் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு மற்றும் கற்புலனற்றோரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்காக சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் அதிகரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 02 நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கற்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கிடைக்கும் நிதி ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட்டமையால் கற்புலனற்றவர்களுக்கு கலைத்துவ பயிற்சிகளை தொடர்வதற்கு அல்லது தொழிற்பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு இணலுமான வகையில் | அந்த 02 நோக்கங்கள் கற்புலனற்றவர்களுக்கு மிகவும் முக்கியமானதென்பதால் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், கற்புலனற்றோரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சீதுவ தொழிற்பயிற்சி நிலையத்தில் நடாத்திச் செல்லப்படும் ஊக்குவிப்பு சந்தை மூலமாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் கற்புலனற்றவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 4. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| நிதியத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மீண்டும் திருத்தப்பட்டு செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், திட்டத்தின் இலக்குகளை அடைந்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | கற்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களுக்கமைய நிதியத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முக்கியமான தலைப்புகளின் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன. உதாரணமாக கல்வி மற்றும் கலாச்சார உதவிகள், விளையாட்டு உதவிகள், புனர்வாழ்வு உதவிகள், தொழில்சார் பயிற்சி போன்றவற்றை குறிப்பிட முடியும் என சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. | கற்புலனற்ற நபர்களுக்கான தேவைகளை இனங்கண்டு செயல்நடவடிக்கை திட்டத்தை அதற்கு இணங்கக்கூடிய வகையில் தயாரிக்க வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பாதீட்டு திட்டத்தின் செலவினங்கள் மற்றும் உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பிடும் போது 10 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சிலான விலகலொன்று அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கற்புலனற்றவர்களுக்க கண் வில்லைகளை வழங்குவதற்காக பாதீட்டினூடாக ரூபா 200,000.00 ஒதுக்கப்பட்ட போதிலும், பிரதேச மற்றும் மாவட்ட ரீதியிலான கற்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் கேள்வி குறைவடைந்திருந்தமை பாதீடு மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றுக்கடையேயான வீச்சிலான அதிகரிப்பிற்கு காரணமாக அமைந்திருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியேற்பாடுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் பாதீட்டினை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பாதீட்டின் செலவினங்கள் மற்றும் உள்ளபடியான செலவினங்களிடையே விலகலொன்றை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |